I Additional District Court, Thoothukudi.

S.C.No.36/2022 நாள் : 22.07.2026

அ.சா.1– திருமதி. சித்திரகலா.

5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–

நான் யோகா பயிற்சியில் பட்டயம் பெற்றுள்ளேன். பிரதம மந்திரியின் பாரத மக்கள் மருந்தகம் என்ற மருந்துக்கடை என் கணவர் பெயரில் உள்ளது. எங்கள் கடை மருந்துகளை எங்கள் கடையில் மட்டும்தான் வைத்து விற்க முடியும் என்றால் சரிதான். அ.சா.ஆ1 புகாரை வழக்கறிஞர் எழுதினார். நான் வழக்கறிஞரை பார்த்துவிட்டு புகார் தயார் செய்து கொண்டு காவல்நிலையம் சென்றேனா என்றால் காவல்நிலையத்தில்தான் வழக்கறிஞர் புகாரை எழுதினார். மருந்து தேவைப்பட்ட நபர் இறந்துவிட்டதால் நெல்லையைச் சார்ந்த சுரேஷ்பாபு என்பவரிடம் மருந்தை கொடுத்து வைத்திருந்தோம் என்று அ.சா.ஆ1 புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மருந்து கொரோனா உயிர் காக்கும் மருந்து என்றால் மரணத் தருவாயில் இருக்கும் நபருக்கு கொடுக்கும் மருந்தாகும். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் மேற்படி மருந்து அதிகம் தேவைப்படக்கூடிய மருந்தாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி மருந்து எங்கள் கடையில் இருப்பது நாங்கள் சொன்னால்தான் வெளியில் தெரியும் என்றால் சரிதான். சுரேஷ் பாபு என்பவர் பெயரில் உரிமம் இல்லை. அதனால் மருந்தை விற்கும் அதிகாரம் சுரேஷ் பாபுவிற்கு இல்லை. சுரேஷ் பாபு மூலமாக மருந்தை நாங்கள் கள்ளச் சந்தையில் விற்றோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எங்கள் கடையில் கண்காணிப்பு கேமரா இல்லை. மேற்படி கடை உள்ள இடம் தூத்துககுடியில் பிரதான பகுதி. அக்கம் பக்கம் உள்ள கட்டிடங்களில் அப்போது கண்காணிப்பு கேமரா இருந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லும்

தேதியிலிருந்து மூன்று நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் மறுநாளே புகார் கொடுத்தோம். அ.சா.ஆ1 புகாரில் என் கையொப்பத்திற்கு கீழ் 04.07.2021 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தேதி என்ன தேதி என்றால் எனக்குத் தெரியாது. எங்கள் மருந்தகத்திலிருந்து மத்திய பாகம் காவல்நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றால் 10 நிமிடத்தில் போகலாம். 01.07.2021 அன்று இரவு என் கணவர் வந்துவிட்டார். என் கணவர் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் கணவரை எதிரிகள் பயமுறுத்தியதால் அவர் புகார் கொடுக்கவில்லை. பட்ட பகலில் பிரதான பகுதியில் இருந்து என் கணவரை கடத்தியிருப்பதாக சொல்லப்படுவதால் உடனடியாக போலீசில் புகார் கொடுக்கவில்லை. என் கணவரின் நண்பர் சுரேஷ் இந்த வழக்கில் எதிரியல்ல. மேற்படி சுரேசும் சேர்ந்து குற்றம் செய்தாரா என்றால் இல்லை. சுரேஷ்பாபுவும், சுரேசும் நண்பர்கள். உயிர் காக்கும் மருந்துகள் எங்கள் கடையில் இருப்பதாக மேற்படி சுரேஷ்தான் 2ம் எதிரியான சுரேஷ்பாபு என்பவருக்கு சொன்னார் என்றால் சரிதான். மற்ற எதிரிகளுக்கு மேற்படி மருந்து பற்றி நேரடியாக தெரியாது. காவல்நிலையத்தில் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யும்போது மருந்துகள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் எங்களிடமிருந்து போலீசார் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். பட்டப்பகலில் பிரதான ஏரியாவில் நடந்த சம்பவத்தை தடுக்க அருகில் உள்ள கட்டிடங்களில் இருந்து யாரும் வரவில்லை என் கணவர், மேற்படி சுரேஷ் மற்றும் 2ம் எதிரி ஆகியோர் என்னிடமிருந்து பணத்தை வாங்குவதற்காக ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள் என்றும், அதனால்தான் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மருந்து கடைக்கான உரிமம் என் கணவர் பெயரில் இருப்பதால்

அவர் புகார் கொடுத்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் என் மூலம் புகார் கொடுக்க வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல. 01.07.2021 அன்று என் கணவர் வீட்டிற்கு வந்தவுடன் சிகிச்சை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. மேற்படி சுரேசும் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி இருவரும் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் பயந்துபோய் இருந்தார்கள். 04.07.2021 அன்று என் கணவரும், மேற்படி சுரேசும் வீட்டில்தான் இருந்தார்கள் என்றால் என் கணவர் வீட்டில் இருந்தார். சுரேஷ் எங்கிருந்தார் என்று தெரியாது. சுரேஷை நான் எப்போது முதலில் பார்த்தேன் என்றால் புகார் கொடுக்கும்போது பார்த்தேன். சுரேஷ் எதற்காக காவல்நிலையம் வந்தார் என்றால் சுரேஷையும் சேர்த்துதான் புகார் எழுதிக் கொடுத்ததால் அவர் காவல்நிலையம் வந்தார். ஏற்கனவே அரங்கேற்றப்பட்ட நாடகத்திற்காக பின்யோசனையின்பேரில் அ.சா.ஆ 1 புகார் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி சுரேஷ் இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. 5ம் எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

3ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு சாட்சி மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

3ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District& Sessions Judge,

Thoothukudi.